# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)
## 49 - கிறிஸ்தவ நாகரிகம்
## புதிய பாடத்திட்டம்
## புள்ளியிடும் திட்டம்

பலவினுள் தெரிவு 50 வினாக்களைக் கொண்டுள்ளது. 50 வினாக்களும் முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் முழுப்பாடத் திட்டத்தையும் பாடப்பரப்பையும் அறிந்துள்ளனர் என்பதை அறிவதற்கு இது உதவியாக அமையும்.

**புள்ளி வழங்கப்படும் விதம்**

| | | |
|---|---|---|
| பலவினுள் தெரிவு வினாக்கள் | - | 50 |
| வழங்கப்படும் புள்ளிகள் | - | 01 |
| மொத்தம் | - | 01 × 50 = 50 |

# கிறிஸ்தவ நாகரிகம் II

## பகுதி I

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 03 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 02 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள மொத்த பிரிவுகள் | - | 04 |
| ஒவ்வொரு வினாவிலுமுள்ள பிரிவுக்கான புள்ளிகள் (2 + 4 + 6 + 8) | - | 20 |
| எனவே பகுதி I இன் இரண்டு வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 2 × 20 = 40 |

## பகுதி II

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 05 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 03 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 10 |
| ஒரு வினாவிலுள்ள மொத்த பிரிவுகள் | - | 02 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | 2 × 10 = 20 |
| எனவே பகுதி II இன் மூன்று வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 3 × 20 = 60 |

## இறுதிப் புள்ளி வழங்கும் முறை

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I | - | 50 புள்ளிகள் |
| கிறிஸ்தவ நாகரிகம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | - | $50+\left(\frac{100}{2}\right)=100$ |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ △ 4/5
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

49 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.

1. நாகரிகத்தின் தொட்டில் எனப்படுவது
   (1) எகிப்து (2) இந்துப் பள்ளத்தாக்கு (3) உரோமை
   (4) கிரேக்கம் (5) மெசப்பத்தேமியா

2. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A - மெய்யியல், விஞ்ஞான ஆய்வுகளுக்கு வித்திட்டமை
   B - பணப் பாவனை அறிமுகப்படுத்தப்பட்டமை
   C - சாஸ்திரம், தாவரவியல், மருத்துவத் துறைகளில் முன்னேற்றமடைந்தமை
   D - விவசாயம், கடல்வழி வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை
   E - எழுத்துருக்களை பப்பிரஸ் பயன்படுத்தப்பட்டமை

   இவற்றுள் கிரேக்க கலாசாரம் உலகிற்கு வழங்கிய பங்களிப்புக்கள் யாவை?
   (1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

3. புராதன 'நினிவே' நகரம் காணப்பட்ட இடம்
   (1) பபிலோனியா (2) எகிப்து (3) கிரேக்கம்
   (4) யோர்தான் (5) அசீரியா

4. உரோமை நாகரிகத்துடன் தொடர்பற்ற கூற்று யாது?
   (1) பேரரசில் நீதித்துறை, அரசியல் சகவாழ்வு காணப்பட்டமை
   (2) தெய்வங்களுக்கும் தேவதைகளுக்கும் வீரர்களுக்கும் விழாக்கள் கொண்டாடப்பட்டமை
   (3) பேரரசில் சமய, அரசியல் சகவாழ்வு காணப்பட்டமை
   (4) கட்டடக் கலையில் சிறந்து விளங்கியமை
   (5) உலகின் முதல் நாட்காட்டியை உருவாக்கியமை

5. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A - 'ஹனுக்கா' ஓர் அறுவடை விழாவாகும்.
   B - பெந்தகோஸ்தே ஓர் அறுவடை விழாவாகும்.
   C - பெந்தகோஸ்தே 'யோம் கிப்பூர்' என்றும் அழைக்கப்படும்.
   D - கூடாரத் திருவிழா 'சுக்கோத்' என்றும் அழைக்கப்படும்.
   E - பாஸ்கா 'யாம் - ஷுபாஸ்' காலப்பகுதியில் கொண்டாடப்படும்.

   இவற்றுள் யூத விழாக்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
   (1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) B, D, E

**6.** கி.பி. 6 ஆம் ஆண்டில் உரோமை பேரரசரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட யூத ஆட்சியாளர்
(1) பெரிய ஏரோது (2) பிலிப்பு (3) I ஆம் அகிரிப்பா
(4) அர்க்கெலா (5) ஏரோது அந்திப்பா

**7.** 'கெரிசிம்' மலை அமைந்துள்ள பகுதி
(1) சமாரியா (2) யூதேயா (3) மேல் கலிலேயா
(4) கீழ் கலிலேயா (5) யோர்தான்

**8.** இறைவாக்கினர் எலியா எந்த அரசனின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தார்?
(1) சாலமோன் (2) ஏரோபவாம் (3) ஆகாப்
(4) யோசியா (5) செதேக்கியா

**9.** எஸ்ரா எந்த வழிமரபிற்குரியவர்?
(1) யூதா (2) பெஞ்சமின் (3) மனாசே
(4) எப்ராயீம் (5) ஆரோன்

**10.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பெத்தேல் சமாரியாவில் அமைந்திருந்தது.
B - ரெகொபெயாம் அரசன் சமாரியாவை ஆட்சி செய்தான்.
C - ஏரோபவாம் அரசன் சமாரியாவை ஆட்சி செய்தான்.
D - சமாரியாவின் கடைசி அரசன் செதேக்கியா.
E - யாக்கோபுவின் கிணறு சமாரியாவில் உள்ளது.
இவற்றுள் சமாரியாவுடன் தொடர்புடைய சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, E (5) C, D, E

**11.** "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத் 6 : 33). இயேசு கிறிஸ்து இவ்வாறு போதித்தது
(1) கலிலேயாக் கடற்கரையில் (2) சீடர்களை அழைத்தபோது
(3) இறுதி இராவுணவின்போது (4) மலைப் பொழிவின்போது
(5) சிலுவையில் தொங்கியபோது

**12.** தொடக்க கிறிஸ்தவர்களின் மூன்று பண்புகளைக் கொண்ட தெரிவு யாது?
(1) குழும வாழ்வு, அந்நிய மொழிகளில் பேசுதல், இறைவேண்டுதல்
(2) பகிர்ந்து வாழ்தல், குழும வாழ்வு, பாடுகளைத் தியானித்தல்
(3) இறைவேண்டுதல், நட்புடன் உறவாடுதல், பகிர்ந்து வாழ்தல்
(4) நட்புடன் உறவாடுதல், பாடுகளைத் தியானித்தல், இறைவேண்டுதல்
(5) நட்புடன் உறவாடுதல், அந்நிய மொழிகளில் பேசுதல், இறைவேண்டுதல்

**13.** முதன் முதலில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்
(1) பவுல் (2) தொமீசியன் (3) நீரோ
(4) திராஜன் (5) வலேரியன்

**14.** உரோமைக் கலாபனைக் காலத்தில் 'கடவுளைச் சுமப்பவர்' என்று அழைக்கப்பட்ட மறைசாட்சி யார்?
(1) புனித பேதுரு (2) புனித திமோத்தேயு
(3) புனித யஸ்ரின் (4) புனித சிப்பிரியா
(5) புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்

15. கிறிஸ்தவத்தின் தொடக்கத்தில் காணப்பட்ட கிரேக்க மெய்யியல் தத்துவங்கள் மூன்றைக் கொண்ட தெரிவு யாது?
(1) ஸ்தொயிக்கம், பிளேற்றோனிசம், நொஸ்திக்கம்
(2) ஸ்தொயிக்கம், நொஸ்திக்கம், அரிஸ்டோட்டனிசம்
(3) நொஸ்திக்கம், டொசேற்றிசம், மனிக்கேயம்
(4) பிளேற்றோனிசம், ஸ்தொயிக்கம், மனிக்கேயம்
(5) பிளேற்றோனிசம், அரிஸ்டோட்டனிசம், எப்பிக்கூரியனிசம்

16. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - தர்சு நகரில் பிறந்தவர்
B - பிறப்பால் உரோமைக் குடிமகன்
C - தமஸ்கு வழியில் மனம்மாறியவர்
D - ஆசிரியர் கமாலியேலின்கீழ் கற்றவர்
E - புனித பார்னபாவின் சீடர்
இவற்றுள் புனித பவுலுடன் தொடர்புடைய சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

17. அலெக்சாந்திரிய புனித கிளெமெண்ட் அவர்களால் எழுதப்பட்ட இரு நூல்களாவன
(1) கிரேக்கருக்கு அறிவுரை, ஆறு வரிசையில் வேதாகமம்
(2) கிறிஸ்தவ அறிமுகம், கிறிஸ்து வேத ஆதாரம்
(3) அப்பலொஜியா, கிரேக்கருக்கு அறிவுரை
(4) கிறிஸ்தவ அறிமுகம், கிரேக்கருக்கு அறிவுரை
(5) பிரமாணங்கள், ஆறு வரிசையில் வேதாகமம்

18. இயேசு தனது பாடுகளையும் மரணத்தையும் எப்போது சீடர்களுக்கு முன்னறிவித்தார்?
(1) யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு பெற்றபோதாகும்.
(2) மறைநூல் அறிஞர்களுடன் கலந்துரையாடியபோதாகும்.
(3) திருமுழுக்கு யோவானின் மரணத்தின் பின்னராகும்.
(4) பேதுருவின் மாமியாரை குணமாக்கியபோதாகும்.
(5) "மெசியா யார்" என்ற கேள்வியினை எழுப்பிய பின்னராகும்.

19. பின்வருவனவற்றுள் மிகச் சரியான சோடி எது?
(1) செப்துவாஜிந்து - சாதாரண கிரேக்க மக்களால் பயன்படுத்தப்பட்ட மொழி
(2) தர்கும் - அரமேய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியம்
(3) வல்கேட் - இந்திய மொழிக் குழுமத்திற்குரியது
(4) கொயினே - கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியம்
(5) கிரேக்க திருச்சபை - இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியம்

20. தொடக்கத் திருச்சபையில் பயன்படுத்தப்பட்ட அடையாளங்களுள் 'மீன்' குறிப்பது
(1) அப்பம் பலுகுதல் (2) இறுதி இராவுணவு (3) கிறிஸ்து
(4) திருத்தூதர்களின் அழைப்பு (5) திருவிருந்து

21. நிசேயா, எபேசு, கல்செதோன் ஆகிய பொதுச் சங்கங்களுடன் தொடர்புடைய பேதகங்கள் முறையே
(1) ஆரிய வாதம், மசிதோனிய வாதம், நெஸ்தோரிய வாதம்
(2) ஆரிய வாதம், நெஸ்தோரிய வாதம், இயுத்திக்கேய வாதம்
(3) மசிதோனிய வாதம், நெஸ்தோரிய வாதம், நொஸ்டிக்க வாதம்
(4) மசிதோனிய வாதம், நெஸ்தோரிய வாதம், இயுத்திக்கேய வாதம்
(5) நெஸ்தோரிய வாதம், நொஸ்டிக்க வாதம், இயுத்திக்கேய வாதம்

22. கிழைத்தேய, மேலைத்தேய துறவற வாழ்க்கைக்கான ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்திய இருவரும் யாவர்?
(1) புனித பசில், புனித பெனடிக்ற்
(2) புனித தேயல் சிசைப்பர், புனித பக்கோமியஸ்
(3) புனித எகிப்து அந்தோனியார், புனித பெனடிக்ற்
(4) புனித பக்கோமியஸ், புனித பசில்
(5) புனித தேயல் சிசைப்பர், புனித பெனடிக்ற்

23. புனித பவுலின் மூன்றாவது தூதுரைப் பயணத்தில் பங்கேற்ற சீடர்களைக் கொண்ட குழு யாது?
(1) மாற்கு, லூக்கா, பர்னபா (2) பர்னபா, தீமோத்தேயு, லூக்கா
(3) மாற்கு, தீத்து, தீமோத்தேயு (4) தீமோத்தேயு, தீத்து, லூக்கா
(5) லூக்கா, தீமோத்தேயு, மாற்கு

24. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - இவர் ஓர் உரோமையர் ஆவார்.
B - 'தன்னிலை ஏற்பு' எனும் நூலில் அவரது வாழ்வு பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.
C - புனித மொனிக்கா அவரது தாயாவார்.
D - அவர் மிகப்பெரிய சிந்தனையாளரும் ஆயருமாவார்.
E - புனித அம்புரோசால் வழிநடத்தப்பட்டு வாழ்வினை மாற்றிக்கொண்டவராவார்.
இவற்றுள் புனித அகுஸ்தினாருடன் தொடர்புடைய சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

25. புனித பற்றிக், புனித கன்ரபரி அகுஸ்தின், புனித கொலம்பான் ஆகியோர் மறைப்பணியாற்றிய நாடுகள் முறையே குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து
(2) அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஜேர்மனி
(3) இங்கிலாந்து, அயர்லாந்து, ஜேர்மனி
(4) அயர்லாந்து, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து
(5) அயர்லாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து

26. பெனடிக்ற் துறவற சபையின் பிரதான பங்களிப்பு **அல்லாதது** யாது?
(1) துறவற வாழ்க்கைக்கான சட்டத் தொகுப்பினை அறிமுகம் செய்தமை
(2) ஐரோப்பிய கோத்திரங்களின் மனமாற்றத்திற்குப் பங்களிப்பு நல்கியமை
(3) ஆழமான புனித விவிலியக் கல்விக்கான வழிகாட்டுதல் வழங்கியமை
(4) சமூகசேவைப் பணிகளில் ஈடுபட்டமை
(5) ஐரோப்பாவின் கல்வி அபிவிருத்திக்காகப் பணியாற்றியமை

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - கிழைத்தேய, மேலைத்தேய சபைத் தலைவர்களுக்கு இடையிலான மோதல்
B - விவிலிய நூல்களின் வரன்முறை குறித்த பிரச்சினை
C - தூய ஆவியாரின் பறப்பினை குறித்த சிக்கல்
D - பரிபூரண பலன்களை விற்றல் குறித்த சிக்கல்
E - நம்பிக்கைக் கோட்பாடுகள் குறித்த முக்கியத்துவம்
இவற்றுள் கிழைத்தேய, மேலைத்தேய சபைகளின் பிரிவினைக்கு வித்திட்ட காரணிகள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

28. சிலுவைப் போருக்கான காரணம்
(1) முஸ்லிம்களுடனான பிரச்சினை
(2) கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்டமை
(3) முஸ்லிம்கள் ஐரோப்பாவிற்குள் நுழைவதைத் தடுத்தல்
(4) மத்திய கிழக்குப் பகுதியில் கிறிஸ்தவத்தைப் பரப்புதல்
(5) இஸ்லாமிய ஆட்சியிலிருந்து புனித நாட்டினை விடுவிக்க வேண்டியேற்பட்டமை

**29.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - கலிலேயாவில் அமைந்துள்ளது.
B - யூதேயாவில் அமைந்துள்ளது.
C - யூத மக்களின் அடையாளமாகும்.
D - தாவீது மன்னனால் கட்டப்பட்டது.
E - சாலமோன் மன்னனால் கட்டப்பட்டது.

இவற்றுள் எருசலேம் ஆலயம் தொடர்பான சரியான கூற்றுக்கள் யாவை?

(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) B, D, E

**30.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - திருச்சபையின் உலகுசார் வாழ்வு
B - திருச்சபைத் தலைவர்களின் ஒழுக்கக்கேடான நடத்தை
C - மறுமலர்ச்சியின் தாக்கம்
D - பரிபூரண பலன்களை விற்றலும் அதிகளவிலான வரிகளை அறவிடலும்
E - புனித உரோமைப் பேரரசிலிருந்து விடுபடுவதற்கான அக்கறை

இவற்றுள் புரட்டஸ்தாந்து மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முக்கிய காரணிகள் யாவை?

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**31.** ஆன்மீக வளர்ச்சிக்காக யாக்கோபுஸ் தே வொராஜினே என்பவரால் எழுதப்பட்ட நூல்

(1) ஆன்மீகப் பயிற்சிகள்
(2) கிறிஸ்துவின் வாழ்க்கை
(3) புனிதர்களின் வாழ்க்கை
(4) கிறிஸ்துநாதர் அனுசாரம்
(5) தெய்வீக நகைச்சுவை (டிவைன் கொமடி)

**32.** புனித சிலுவை யோவானால் ஆன்மீக சீர்திருத்தத்திற்கு வழிகாட்டும் விதத்தில் எழுதப்பட்ட இரு நூல்களாவன

(1) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, உள்ளக அரண்மனை
(2) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, கார்மேல் மலையேற்றம்
(3) உள்ளக அரண்மனை, ஆன்மீகக் கீதம்
(4) ஆன்மீகப் பயிற்சிகள், ஆன்மாவின் இருள் அடர் இரவு
(5) தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை, ஆன்மீகக் கீதம்

**33.** லியனார்டோ டாவின்சியின் உலகப் பிரசித்தி பெற்ற இரு ஓவியங்களாவன

(1) இறுதி இராவுணவு, உலகப் படைப்பு
(2) மொனாலிசா, ஆதாமின் படைப்பு
(3) இறுதி இராவுணவு, நடுத்தீர்வை
(4) மொனாலிசா, நடுத்தீர்வை
(5) இறுதி இராவுணவு, மொனாலிசா

**34.** ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் மூன்று பல்கலைக்கழகங்களாவன

(1) பொலொஞ்ஞா, பரிஸ், ஒக்ஸ்போட்
(2) சலமன்கா, பரிஸ், ஜெனோவா
(3) பொலொஞ்ஞா, கேம்பிரிட்ஜ், மிலான்
(4) பொலொஞ்ஞா, பரிஸ், சலமன்கா
(5) பரிஸ், கேம்பிரிட்ஜ், வியன்னா

**35.** ஜோன் மில்டனால் எழுதப்பட்ட நூல்

(1) யாத்திரிகனின் பயணம்
(2) கிறிஸ்துநாதர் அனுசாரம்
(3) இழந்த இன்பலோகம்
(4) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி
(5) உள்ளக அரண்மனை

**36.** ஆசியாவில் கிறிஸ்தவத்தை தமது நாட்டுச் சமயமாக முதன் முதலில் ஏற்றுக்கொண்ட நாடு
(1) ஆர்மேனியா (2) பிலிப்பைன்ஸ் (3) துருக்கி
(4) ஈரான் (5) சீனா

**37.** உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இருந்துகொண்டே தனித்தியங்கும் சிரிய மரபுத் திருச்சபை யாது?
(1) சீரோ மலபார் திருச்சபை
(2) இலத்தீன் திருச்சபை
(3) மார் தோமா திருச்சபை
(4) கொப்டிக் திருச்சபை
(5) மலங்கரா சிரிய வைதீக திருச்சபை

**38.** அருட்பணி மத்தேயு ரிச்சியினால் எழுதப்பட்ட நூல்
(1) சவேரியார் மறைசாட்சிகள் (2) கிறிஸ்தவ சபைகளின் விவரணம்
(3) உண்மை இறைக்கோட்பாடு (4) ஒளி வீசும் மதம்
(5) யாத்திரிகனின் பயணம்

**39.** பிலிப்பைன்ஸ் மக்களைக் கவர்ந்த ஸ்பானிய மறைபரப்பாளர்களின் நடவடிக்கைகளைக் கொண்ட தெரிவு யாது?
(1) உணவுப் பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், செபங்கள்
(2) ஆடம்பரக் கொண்டாட்டங்கள், செபங்கள், வழிபாடுகள்
(3) மேலைத்தேய வாழ்க்கைமுறை, வழிபாடுகள், புனிதர் வணக்கம்
(4) புனிதர் வணக்கம், செபங்கள், மேலைத்தேய வாழ்க்கைமுறை
(5) ஆடம்பரக் கொண்டாட்டங்கள், வழிபாடுகள், உணவுப் பழக்கவழக்கங்கள்

**40.** இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய ஆட்சியாளர்கள் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டியமைக்குக் காரணம் யாது?
(1) தங்களது ஆட்சியினை வலுப்படுத்திக் கொள்வதற்காகும்.
(2) ஆட்சி செய்த ஒவ்வொரு நாடுகளும் கல்வியை முன்னேற்றுதல் அவர்களின் கொள்கை என்பதாலாகும்.
(3) நற்செய்தி அறிவிப்புக்கான வழிமுறையாக கல்வியைக் கருதியதாலாகும்.
(4) நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு கல்வி காரணமாய் அமைவதனாலாகும்.
(5) கல்வி அடிப்படை மனித உரிமையாகக் கருதப்பட்டமையாலாகும்.

**41.** 'மனித மாண்பினை' பிரதான கருப்பொருளாகக் கருதும் 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடு
(1) திருவழிபாடு (2) இன்றைய உலகில் திருச்சபை
(3) திருச்சபை (4) சமூகத் தொடர்புகள்
(5) குருத்துவப் பயிற்சி

**42.** திருத்தந்தை 2 ஆம் ஜோன் பவுலால் எழுதப்பட்ட சுற்றுமடல்களை உள்ளடக்கியவை
(1) அன்னையும் ஆசிரியரும், மனிதரின் மீட்பர், அன்பே கடவுள்
(2) தொழிலாளர் நிலைமை, இன்றைய உலகில் திருச்சபை, மனித உழைப்பு
(3) நூறாவது ஆண்டு, அன்னையும் ஆசிரியரும், அன்பே கடவுள்
(4) மனிதரின் மீட்பர், மனித உழைப்பு, திருச்சபையின் சமூக அக்கறை
(5) மக்களின் முன்னேற்றம், மனித உழைப்பு, இறைவனுக்கே புகழ்

**43.** உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தில் இணைந்துகொள்ள விரும்பாத சபைகள் இணைந்து உருவாக்கிய அமைப்பு
(1) உலக இவாஞ்சலிக்கல் கூட்டமைப்பு
(2) நம்பிக்கைக்கும் ஒழுங்குக்குமான ஆணைக்குழு
(3) சர்வதேச மிஷனறிச் சங்கம்
(4) கிறிஸ்தவக் கல்விக்கான உலக சங்கம்
(5) வாழ்வுக்கும் பணிக்குமான இயக்கம்

**44.** புராதன திருமுழுக்கு நீர்ப் பாத்திரம் காணப்படும் இடம் யாது?
(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை
(3) நம்பத்தெனியா (4) சிகிரியா
(5) வைஹிரியா

**45.** 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' வார்த்தை உலகெங்கும் பரவலடையச் செய்த திருத்தந்தை
(1) 9 ஆம் பயஸ் (2) 10 ஆம் பயஸ்
(3) 13 ஆம் லியோ (4) 6 ஆம் பவுல்
(5) 15 ஆம் பெனடிக்ற்

**46.** 'ஆசியத் திருச்சபை' மடலின்படி 'இறைவெளிப்பாடு' நிகழ்ந்ததாகக் கருதப்படும் இடம் யாது?
(1) அவுஸ்திரேலியா (2) ஆசியா
(3) ஐரோப்பா (4) தென் அமெரிக்கா
(5) ஆபிரிக்கா

- பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி **47** தொடக்கம் **50** வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A<br>அருட்திரு. (ஜே) விக்கென்றே | B<br>வெஸ்லியன் மிசனரி | C<br>வண. பிலிப்ஸ் பல்தேயஸ் | D<br>அருட்பணி மைக்கல் ரொட்றிகோ |
| E<br>வேத மதத்தின் முக்கிய கட்டளைகள் | F<br>'கஸிசேத் கெதுர' | G<br>புனித லோரன்சின் சிற்றாலயம், கொழும்பு | H<br>திரினிட்டி கல்லூரி, கண்டி |

**47.** போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, G (2) A, H (3) B, E (4) C, F (5) D, G

**48.** கல்வினிஸ்ட் மரபுடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) B, G (3) C, E (4) C, F (5) D, H

**49.** பிரித்தானியர் ஆட்சிக் காலத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, G (2) B, H (3) C, E (4) C, H (5) D, G

**50.** இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) B, G (3) C, G (4) D, F (5) D, H

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020**

විෂය අංකය / பாட இலக்கம் **49** විෂයය / பாடம் **கிறிஸ்தவ நாகரிகம்**

**ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்**
I පත්‍රය / **பத்திரம்** I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 2 | 31. | 3 | 41. | 2 |
| 02. | 2 | 12. | 3 | 22. | 1 | 32. | 5 | 42. | 4 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 4 | 33. | 5 | 43. | 1 |
| 04. | 5 | 14. | 5 | 24. | 4 | 34. | 4 | 44. | 5 |
| 05. | 5 | 15. | 1 | 25. | 4 | 35. | 3 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 4 | 36. | 1 | 46. | 2 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 3 | 37. | 1 | 47. | 1 |
| 08. | 3 | 18. | 5 | 28. | 5 | 38. | 3 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 4 | 39. | 2 | 49. | 2 |
| | 3 | | 3 | | 2 | | 3 | | 4 |

.........

✪ විශේෂ උපදෙස් / **விசேட அறிவுறுத்தல் :**

එක් පිළිතුරකට / **ஒரு சரியான விடைக்கு** 01 ලකුණු බැගින් / **புள்ளி வீதம்**

මුළු ලකුණු / **மொத்தப் புள்ளிகள்** 1 x 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | | |
|---|---|---|
| ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය | II | |
| கிறிஸ்தவ நாகரிகம் | II | **49 T II** |
| Christian Civilization | II | |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) கிறிஸ்தவ வழிபாட்டில் தாக்கம் செலுத்திய உரோமைய வழிபாட்டு பழக்க வழக்கங்கள் **நான்கினைத்** தருக. (2 புள்ளிகள்)

   (ii) கலிலேயாப் பகுதியின் புவியியல் அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

   (iii) சீனாய் உடன்படிக்கையின் பண்புகளை விவரிக்குக. (6 புள்ளிகள்)

   (iv) எகிப்து மற்றும் மெசப்பத்தேமிய நாகரிகங்கள், யூத கலாசாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பது பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

2. (i) இஸ்ரயேலின் கடவுளுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (ii) யூத செபத்தின் (இறை வேண்டலின்) பண்புகள் **நான்கினைத்** தருக. (4 புள்ளிகள்)

   (iii) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து விவரிக்குக. (6 புள்ளிகள்)

   (iv) அர்க்கெலா, பிலிப்பு, ஏரோது அந்திப்பா ஆகியோரின் ஆட்சிக்காலம் உள்ளடங்கலாக, இயேசுவின் காலத்தில் காணப்பட்ட அரசியல் நிலைமைகளை விளக்குக. (8 புள்ளிகள்)

3. (i) கிறிஸ்தவ இசையின் வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (ii) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவான காரணிகள் **நான்கினை** எழுதுக. (4 புள்ளிகள்)

   (iii) இலங்கையின் கல்விக்கு அருட்பணி பீற்றர்பிள்ளை வழங்கிய பங்களிப்பினை விவரிக்குக. (6 புள்ளிகள்)

   (iv) புனித தோமஸ் அக்குவினாசின் படிப்பினைகளை விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) இயேசுவின் பாடுகள், மரணம் பற்றிய நற்செய்தியாளரான யோவானின் படிப்பினைகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(ii) இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வை மேலும் விருத்தி செய்து கொள்வதற்குத் துணையாய் அமையும் விதத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதிலும் நற்செய்தி அறிவிப்பதிலும் தொடக்க திருச்சபையானது எப்போதும் தூய ஆவியில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய உலகில் கிறிஸ்தவ சான்று பகர்தலானது, தூய ஆவியானவரின் வல்லமையிலும் வழிகாட்டுதலிலும் ஏன் தங்கியிருக்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

6. (i) முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த பல்வேறுபட்ட கலாபனைகள் குறித்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) "கலாபனைகளுக்கு கிறிஸ்தவர்கள் அளித்த பதிலானது அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவத்தின் செய்தியினை இன்றைய உலகிற்கு வழங்கியுள்ளது." கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

7. (i) இரண்டு சபைகளைப் பெயரிட்டு, அக்காலத்தில் சீர்குலைந்திருந்த திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு அச் சபைகள் ஆற்றிய பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) 'நற்செய்தியின் ஏழ்மை' எல்லாச் சந்தர்ப்பங்களிலும் திருச்சபை உலகில் மீட்பின் அடையாளமாக இருப்பதற்குத் துணையாய் அமையும் விதத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

8. (i) 'மனித மாண்பு' தொடர்பான இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மனித மாண்பு மறுதலிக்கப்பட்ட இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, மனித மாண்பினைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவ நாகரிகம்
# பகுதி II
# அமைப்புக் கட்டுரை I

**01. கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பண்டைய நாகரிகங்களாகிய எகிப்து, மொசப்பத்தோமியா போன்றவையும், உரோமை, யூதப் பண்பாடுகள் போன்றவையும் எவ்வகையில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பது பற்றிய மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. கிறிஸ்தவ வழிபாட்டில் தாக்கம் செலுத்திய உரோமைய வழிபாட்டு பழக்க வழக்கங்கள் நான்கினைத் தருக.**

- உரோமப் பேரரசில் நிலை கொண்டிருந்த கிறிஸ்தவம், உரோமைய மக்களின் வழிபாட்டு மரபில் வழக்கில் இருந்த பல பழக்கங்களை உள்வாங்கி மாற்றியமைத்தது.
- உரோமர்கள் தம் தெய்வங்களுக்கும் வீரர்களுக்கும் அரசர்களுக்கும் விழா எடுத்தது போன்று கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்த மறைசாட்சிகளுக்கு விழா எடுத்தனர்.
- உரோமர் மார்கழி 25 ஆம் திகதியை சூரியன் பிறந்த தின விழாவாகப் பெரும் ஆடம்பரமாகக் கொண்டாடினர். இத்தினத்தையே உரோமப் பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி. 366 முதல் நீதியின் ஆதவனான, அறிவாளனான இயேசு பிறந்த தினமாக ஆடம்பரமாகக் கொண்டாடினர்.
- கி.பி. 366 இல் இருந்து மேற்கு நாடுகளில் உரோமைய இலத்தீன் வழிபாட்டு முறையை பின்பற்றி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.
- கிறிஸ்தவர்களின் வழக்கிலுள்ள மன்றாட்டு, நோன்பு நாட்கள், பவனிகள் முதலியன உரோமயர்களின் மரபில் இருந்து தோன்றியவை.
- உரோமர்கள் மத்தியில் காணப்பட்ட அரசர்களுக்கும், தளபதிகளுக்குமான மரியாதை, வழக்கில் இருந்த உடை மரபு ஆகியன கிறிஸ்தவ கலாசாரத்தினுள் நுழைந்தன.
- வழிபாட்டின் போது முழந்தாளிடும் மரபும் உரோமையர்களிடமிருந்து கிறிஸ்தவர்களால் பின்பற்றப்பட்டது.
- உரோமர்கள் மத்தியில் அரசனுக்கும், தளபதிக்கும் படைவீரர் ஒற்றைக் காலில் முழந்தாளிடுவது அவர்களுக்கு அளிக்கும் உயர் மரியாதையாகக் கருதப்பட்டது. அதனை கிறிஸ்தவர்களும் தங்களது வழிபாடுகளில் கடவுளுக்கு மரியாதை செலுத்தும்போது கையாண்டனர்.

**(02 புள்ளிகள்)**

**ii. கலிலேயாப் பகுதியின் புவியியல் அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- கலிலேயாப் பகுதி பாலஸ்தீனாவின் மிகச் செழுமை வாய்ந்த பகுதியாகும்.
- லெபனான் மலைத் தொடரையும் சீரியாவையும் வடக்கு எல்லையாகவும், கார்மேல் மலைத்தொடரையும் எஸ்திரலோன் புல்வெளியையும் தெற்கு எல்லையாகவும் கொண்டுள்ளது.
- புதிய ஏற்பாட்டில் முக்கிய பங்கினை வகிக்கும் கலிலேயாவினை மேல் கலிலேயா, கீழ்க் கலிலேயா எனப்பிரிப்பர்.
- பாலஸ்தீனாவில் காணப்படும் அதி உயர்ந்த மலைப்பகுதி மேல் கலிலேயாவில் உள்ளது.
- சிறிய குன்றுகளும், செழிப்பான பகுதிகளும் கீழ் கலிலேயாவில் உள்ளன.
- கலிலேயாப் பகுதியில் நாசரேத்து, கானா, நயீன், கப்பர்நாகும், திபேரியா, பெத்சாய்தா, தாபோர் மலை போன்ற முக்கியமான இடங்கள் காணப்பட்டன.
- **நாசரேத்து:** எருசலேமிலிருந்து 72 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இவ்வூர் கடல்மட்டத்திலிருந்து 1200 அடி உயரத்திலுள்ளது. திராட்சையும், அத்தியும், ஒலிவ மரங்களும் செழித்து வளரும் இடம்.
- **கானா:** கானா நாசரேத்துக்கு எட்டுக் கிலோமீற்றர் வடக்கேயுள்ள ஒருமலைப் பகுதி.
- **நயீன்:** தாபோர் மலைக்கு சற்றுத் தெற்கே நயீன் ஊர் உள்ளது.
- **கப்பர்நாகும்:** இந்நகர் கலிலேயாக் கடலின் வடகரையில் உள்ளது.
- **திபேரியா:** மூன்று மைல்கள் நீளமுள்ள சுற்றுச்சுவர் இந்நகரைச் சூழ்ந்திருந்தது.
- இதனுள் ஆலயம், வீடுகள், பொதுக்கழிவறைகள், அரண்மனை, கலைக்கூடம், நாடக அரங்கம் போன்றவை இருந்தன.
- திபேரியாவுக்கு அருகில் பழங்காலக் கனானேயரின் நகரமொன்றை அகழ்வாராட்சியாளர் அண்மையில் கண்டு பிடித்துள்ளனர்.
- **பெத்சாய்தா:** பெத்சாய்தா கப்பர் நாகுமுக்கு மிக அருகில் உள்ளது.
- **தாபோர் மலை:** எஸ்திரலோன் சமவெளியின் ஒரு மூலையில் தாபோர் மலை உள்ளது.
- இதுகடல் மட்டத்திற்கு மேல் 1800 அடி உயரமுடையது. இம்மலையின் மீதிருந்து கார்மேல் மலையையும், எர்மோன் மலையையும் காணாலாம். **(04 புள்ளிகள்)**

**iii. சீனாய் உடன்படிக்கையின் பண்புகளை விவரிக்குக.**

- இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாள் சீனாய் மலையில் பாளையம் இறக்கிய போது அங்கு இறைவெளிப்பாட்டைக் கண்டு அனுபவித்தனர்.
- சீனாய் மலையில் இறைவன் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்களுடன் ஓர் உடன்படிக்கையினைச் செய்து கொண்டார்.
- அவ்வுடன்படிக்கை மூலம் ஒரே கடவுளாகிய யாவேயை வழிபட வேண்டும் என்பதை இஸ்ரயேல் மக்கள் ஏற்றுக்கொண்டனர்.
- மேலும் இவ்வுடன்படிக்கை மூலம் இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்குச் சொந்தமான அரச, குருத்துவ, தூய மக்களினம் ஆனார்கள். (வி.ப. 19 : 5 - 6)
- இந்த உடன்படிக்கையில் காணப்பட வேண்டிய பண்புகள் பல உண்டு.

- உடன்படிக்கை செய்யப்போகின்றவரை, பேரரசரை இனம்கண்டு, நன்றாக முன்னறிந்து கொள்ளுதல், பேரரசரால் முன்னைய காலங்களில் கைப்பற்றப்பட்ட இடங்களுக்கு செய்யப்பட்ட உதவிகள், நன்மைகள் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ளுதல் என்னும் பண்பும் சீனாய் உடன்படிக்கையில் பின்வருமாறு காணப்படுகின்றது. கடவுளை இனம் கண்டு, அவர் இஸ்ரயேலருக்கு முன்னர் செய்த அரும்பெரும் செயல்களை அறிந்து கொள்ளுதல். (வி.ப. 19 : 4-6, 20 : 2)
- உடன்படிக்கையால் கட்டுப்படுத்தப்படும் நிபந்தனைகள், கடமைகள், உரிமைகள், உடன்படிக்கை வாசிக்கப்பட்டு, விருந்துடன் முடிவுறுதல் என்னும் பண்புகள் பின்வருமாறு காணப்படுகின்றது. நிபந்தனைகள், கடமைகள், கட்டளைகள் ( வி.ப. 20:3, 23: 33 ) உடன்படிக்கையை வாசித்தல் (வி.ப. 24: 7), விருந்து பரிமாறல் (வி.ப. 24: 9-11)
- இறைசாட்சிகள், ஆசீர்கள், சாபங்களின் பட்டியல் என்னும் பண்புகள் இணைச்சட்ட நூலில் இறைசாட்சிகள், ஆசீர்கள், சாபங்கள் என காணப்படுகின்றன. (4:26, 30:19, 27:11-26)
- உடன்படிக்கைப் பத்திரம் ஒரு புனிதமான இடத்திலே பாதுகாப்பாக வைக்கப்படுதல் என்னும் பண்பு சீனாய் உடன்படிக்கையில் புனிதமான இடத்தில் பத்திரத்தை பாதுகாப்பாக வைத்தல் ( வி.ப. 25:16 ) என்பதில் காணலாம். **(06 புள்ளிகள்)**

iv. **எகிப்து மற்றும் மொசப்பத்தேமிய நாகரிகங்கள், யூத கலாசாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பது பற்றி விளக்குக.**

**எகிப்து நாகரிகம் யூத கலாச்சாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்**

- விவசாய நடைமுறைகள்
- அரசன் தெய்வ அதிகாரம் பெற்றவர் என்ற நம்பிக்கை
- ஆட்சி நிர்வாக முறை
- தந்தைக்குப் பின் ஆட்சி அதிகாரம் மூத்த மகனுக்கு உரித்தானது என்ற பண்பு
- மரணத்தின்பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கைகள், மரணச்சடங்கு முறைகள்
- எகிப்திய கட்டிட, சிற்ப வேலைப்பாடுகள்
- கணித, வைத்தியத் துறைகள்

**மொசப்பத்தேமிய நாகரிகம் யூத கலாச்சாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்**

- மரணத்தின் பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை
- தீய ஆவியை விரட்டுதல்
- நீதி நிர்வாக முறை
- பல்சமயப் பின்னணியில் வாழ்ந்த மக்கள்
- கனவு காணல், கனவுகளுக்கு பொருள் கூறுதல்
- சுமேரிய சிறிய கட்டளைகள்
- மனித மீட்புக்கு தெய்வங்களின் துணை அவசியம் என்ற நம்பிக்கை
- கட்டிடம், சிற்பக் கலை

**(08 புள்ளிகள்)**

**02. இஸ்ரயேல் மக்களால் கடவுளுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் பற்றியதும் யூத சமயத்தின் இறை வேண்டலின் பண்புகள் பற்றியதும் இயேசுவின் கால யூதப் பெண்களின் நிலை பற்றியதும் இயேசுவின் கால அரசியல் சூழல் பற்றியதுமான மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. இஸ்ரயேலின் கடவுளுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- இஸ்ரயேலரின் வாழ்க்கையின் பல்வேறு கால வரலாற்றின் அடிப்படையில் தமது அனுபவங்களின் தன்மைக்கு ஏற்ப ஒரே இறைவனை பல பெயர்களில் அழைத்து வழிபட்டனர்.
- ஏல் என்பது கடவுள் / இறைவன் என்னும் பொது பெயர் ஆகும்.
- பின்வரும் பெயர்கள் இறைவனின் தனித்துவமான பண்புகளை குறிப்பதாக அமைந்துள்ளது.
- ஏல் ஏலோகிம் : படைத்தவரான கடவுள் / விண்ணில் உள்ள இறைவன்
- ஏல் ஏலியோன் : உன்னதரான இறைவன்
- ஏல் சடாய் : எல்லாம் வல்ல இறைவன் / மாட்சியில் உள்ளவர்
- ஏல் பெரித் : உடன்படிக்கையின் இறைவன்
- யாவேயீரே : இருக்கிறவராக இருக்கின்றவர் / முதலும் முடிவுமற்ற இறைவன்
- அதோனாய் : என் ஆண்டவர் **(02 புள்ளிகள்)**

**ii. யூத செபத்தின் (இறை வேண்டலின்) பண்புகள் நான்கிளைத் தருக.**

- இஸ்ரயேலரின் சமய வழிபாட்டில் செபம் சிறப்பான இடம் பெற்றது.
- பலியிடுவதையும் அவர்கள் செபமாகவே கருதினர்.
- யூதர்களின் அன்றாட செபம் 'ஷேமா' என்று அழைக்கப்பட்டது.
- 'ஷேமா' என்பது இஸ்ரயேலே கர்த்தருக்கு செவிகொடு என்பது பொருள் ஆகும்.
- யூதர்கள் நாள்தோறும் மூன்று முறை செபிக்கும் பண்புடையவர்கள்.
- 'ஹெமோயே எஸ்ரே' என்ற பதினெட்டு புகழுரைச் செபங்களிலும் யூதர்களின் செபிக்கும் பண்பு காணப்பட்டது.
- இயேசுவின் காலத்தில் காலை, நண்பகல், மாலை வேளைகளில் செபம் செய்யும் பண்பு காணப்பட்டது.
- செபம் செய்யும் போது **தெபிலின்** என்னும் மறைவாசகங்கள் அடங்கிய தோல் பேழையை அணிந்து **தாலித்** எனப்படும் சால்வையால் தம்மைப் போர்த்திக் கொண்டு செபிக்கும் பண்பு காணப்பட்டது.
- செபிக்கும்போது கடவுளின் நகராம் எருசலேம் நகரை நோக்கி மண்டியிட்டு கைகளை உயர்த்தி, உரத்த குரலில் செபிப்பர்.
- யூதர்களிடையே கோயிலிலும், தொழுகைக் கூடங்களிலும் செபிக்கும் பண்பு காணப்பட்டது.

**ள்ளிகள்)**

**iii. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து விவரிக்குக.**

- இயேசுவின் காலத்தில் யூத சமுதாயத்தில் பெண்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர்.
- இவர்களுக்கு சமூகத்தில் தகுந்த இடம் வழங்கப்பட்டிருக்கவில்லை.
- இவர்கள் சமயரீதியாகவும், சமூகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டனர்.
- குடும்பங்களிலும் இவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன.
- சமூகரீதியாக பாலஸ்தீனப் பெண் ஒருவர் வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது தலையை மூடி முகத்திரை அணிந்து செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாவிடின் கணவன் அவளை மணவிலக்குச் செய்யலாம் என்னும் நியதி காணப்பட்டது.
- அவ்வாறு மணவிலக்கு அளிக்கும் போது அவளுக்கு கொடுக்க வேண்டிய தாபரிப்பு எதையும் வழங்கத் தேவையில்லை என்னும் நிலை காணப்பட்டது.
- எந்த பெண்ணும் ஒரு ஆணுடன் தனியாக இருப்பதோ அல்லது ஒரு ஆண் திருமணமான வேறொரு பெண்ணைப் பார்ப்பதோ அல்லது அவளுக்கு வாழ்த்துக் கூறுவதோ தவறு என்னும் நிலை காணப்பட்டது.
- எந்த மனைவிக்கும் கணவனில் சட்டப்படியான அதிகாரமில்லை. ஆனால் கணவனுக்கு அவனுடைய மனைவி தனிப்பட்ட உடைமையாகக் கருதப்பட்டாள்.
- இவ்வாறான பின்னணியில் கணவன் தன் மனைவியை இலகுவில் விலக்கி விடச் சட்டம் அனுமதித்திருந்தது.
- மணவிலக்கு வழங்குவதில் ஆண்களுக்கு அனுமதியுண்டு, ஆயினும் பெண்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது.
- பெண்கள் ஆண்களுடன் சரிநிகராக அமர்ந்து உணவருந்தக் கூடாது.
- ஆண்கள் உணவருந்தும் போது பெண்கள் அவர்களுக்கு பரிமாறிக்கொண்டு நிற்க வேண்டும்.
- தெருக்களிலும், ஆலயத்திலும், தொழுகைக்கூடத்திலும் பெண்களுக்கு தனியான இடமே வழங்கப்பட்டிருந்தது.
- பொதுவாக பெண்களுக்கு வீடே உலகமாக விளங்கியதுடன், வீட்டு யன்னல்கள் திரை போட்டு மறைக்கப்பட்டிருக்கும்.
- கணவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பது ஆன்மீக செயலாகக் கருதப்பட்டது.
- பெண்களில் கைம்பெண்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். எவ்வித தொழிலிலும் அவர்கள் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது.
- மனித பண்பற்ற முறையில் இவர்கள் நடத்தப்பட்டார்கள். காலடி கழுவுதல் போன்ற இழிவான செயல்களில் அவர்கள் ஈடுபட்டனர்.
- சமயக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஆண்களுக்குரிய கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.
- “ஷேமா” என்ற யூதர்களின் செபத்தை இவர்கள் சொல்லத் தேவையிருக்கவில்லை.
- துணி நெய்தல், உரொட்டி சுடுதல், வீட்டுப்பொருட்கள் செய்தல், நீரூற்றிலிருந்து நீர் கொண்டு வருதல், எண்ணெய் தயாரித்தல், போன்ற வேலைகள் பெண்களுக்கு உரித்தான வேலைகளாகக் கருதப்பட்டன.
- கோவிலில் பெண்கள் பகுதிக்கும், மற்றப் பகுதிக்குமிடையில் தடுக்கும் தட்டு வைக்கப்பட்டிருந்தது.
- கோவிலில் இவர்கள் கற்பிக்கக் கூடாது.
- ஷேமாவைத் தினமும் வாசித்தல், கூடாரத் திருவிழாவின்போது கூடாரத்தில் தங்கியிருத்தல், வலது கையில் பேரீச்ச ஓலைகளையும், அலரி இலைகளையும் எடுத்துச் செல்லல் போன்றவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**(06 புள்ளிகள்)**

iv. **அர்க்கெலா, பிலிப்பு, ஏரோது அந்திப்பா ஆகியோரின் ஆட்சிக்காலம் உள்ளடங்கலாக, இயேசுவின் காலத்தில் காணப்பட்ட அரசியல் நிலைமைகளை விளக்குக.**

- இயேசுவின் காலத்தில் பலஸ்தீனா உரோமையப் பேரரசின் ஆட்சிக்கு உட்படடிருந்தது.
- இயேசுவின் காலத்தில் உரோமைய பேரரசை அகஸ்துஸ் சீசர் ஆட்சி செய்தார்.
- உரோமையர் தாம் கைப்பற்றிய நாடுகளை தமது கட்டுபாட்டில் வைத்திருக்க ஆளுனர்களை நியமித்தனர்.
- இயேசுவின் காலத்தில் போந்தியு பிலாத்து ஆளுனராக இருந்தார்.
- உரோமையர்களால் பெரிய ஏரோது பாலஸ்தீனாவின் அரசனாக நியமிக்கப்பட்டார். அவர் கி.மு. 37 தொடங்கி கி.மு.4 வரை ஆட்சி புரிந்தார்.
- அவருக்கு பின் அவருடைய பிள்ளைகளான அர்க்கெலா, பிலிப்பு, ஏரோது அந்திபா போன்றோர் பாலஸ்தீனாவை மூன்றாக பிரித்து ஆட்சி செய்தனர்.
- அர்க்கெலா கி.மு. 4 - கி.பி. 6 ஆம் ஆண்டுவரை யூதேயா, சமாரியா, இதுமேயா பகுதிகளை ஆட்சி புரிந்தார்.
- பிலிப்பு கி.மு. 4 ஆம் ஆண்டிலிருந்து கி.பி.34 வரை கலிலேயாவின் கிழக்குப் பகுதிகளுக்கும், வடக்கு பகுதிகளுக்கும் குறுநில மன்னராக ஆட்சி புரிந்தார்.
- ஏரோது அந்திப்பா கி.மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 39 வரை கலிலேயாவையும் பெரேயாவை யும் ஆட்சி புரிந்தார்.

**(08 புள்ளிகள்)**

**03. கிறிஸ்தவ இசையின் வகைகள் பற்றியதும் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமைக்கான காரணிகள் பற்றியதும் இலங்கையின் கல்விப் பணிக்கு அருட்பணி. பீட்டர்பிள்ளை வழங்கிய பங்களிப்புப் பற்றியதும் புனித தோமஸ் அக்குவனைசின் பணிகள் பற்றியதுமான மாணவர்களின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. கிறிஸ்தவ இசையின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- கிறகோரியாரின் இசை
- கலப்பு இசை / பொலிப்போனி இசை
- விசேட சேர்ந்திசை முறை
- ஒரத்தோரியோ இசை
- திருப்பலிப் பாடல்கள் / பாடல் திருப்பலிகள்
- பறோக் இசை **(02 புள்ளிகள்)**

**ii. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு ஏதுவான காரணிகள் நான்கினை எழுதுக.**

- கீழைத்தேச வர்த்தகத்தில் ஆதாயத்தையும், ஏகபோக உரிமைகளை அராபியரிடமிருந்து முற்றிலும் கைப்பற்றித் தமதாக்கிக் கொள்ளல்.
- பொருளாதார ரீதியாக இலாபம் பெறுதல்.
- கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
- தமது ஆட்சியைப் பல்வேறு நாடுகளில் விஸ்தரித்தல். **(04 புள்ளிகள்)**

**iii. இலங்கையின் கல்விக்கு அருட்பணி பீற்றர்பிள்ளை வழங்கிய பங்களிப்பை விவரிக்குக.**

- அருட்பணி பீற்றர் பிள்ளை அவர்கள் 1904ஆம் ஆண்டு யாழ் நகரைச் சார்ந்த ஜேக்கப், ஆனாப் பிள்ளை என்பவர்களின் புதல்வராகப் சிலாபத்திலுள்ள வென்னப்புவ எனுமிடத்தில் பிறந்தார்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை 1914ஆம் ஆண்டு கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியிலே பயின்றார்.
- 1934இல் அமல மரித் தியாகிகள் சபையில் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1936 இல் உரோமாபுரியில் இறையியல் கலாநிதிப் பட்டம் பெற்று ஒரு பெரிய கல்விமானாக இலங்கைக்குத் திரும்பினார்.

**கல்விக்கு இவர் வழங்கிய பங்களிப்பு:**

- இலங்கையில்தனதுமுதற்பணியாகக்கொழும்புமறைமாவட்டத்தில்புனிதபேதுருகல்லூரியில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.
- 1940இல் கொழும்பு மறைமாவட்டத்தில் தூய வளனார் கல்லூரியின் 5ஆவது அதிபராக நியமனம் பெற்றார்.
- தகைமையுடைய அனைத்து உயர்தர மாணவர்களுக்கும் உயர் கல்வி பயிலும் வாய்ப்புக் கிட்ட வேண்டும் என்பதே இவரது நீண்ட கால கனவாக இருந்தது.

- இலங்கை அரசு போதிய பல்கலைக்கழக வசதி இல்லாத காரணத்தினால் க.பொ.த.(உ/த) பரீட்சையில் அதிக புள்ளி பெற்றவர்களுக்கு மட்டும் உயர் கல்வியை வழங்கியதால், இவர் 1954 இல் அக்குவினாஸ் உயர்தரக் கல்லூரியை கொழும்பு பொரளையில் நிறுவினார்.
- இதன் மூலம் அரசபல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் அக்குவினாஸ் பல்கலைக்கழகத்தின் ஊடாக உயர் கல்வியைப் பெற வழிசமைத்தார். அவரே அதன் முதல் அதிபராகவும் பணியாற்றினார்.
- சகலராலும் கல்விமானாக மதிக்கப்பட்ட அருட்தந்தையவர்கள், கொழும்பிலுள்ள கல்விமான்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி சவேரியன்ஸ் (Xaverians) என்றழைக்கப்பட்ட கல்விமான்களுக்கான ஓர் அமைப்பையும் உருவாக்கினார்.
- இவர் சமூக நீதியை மையமாக வைத்து 14ற்கும் குறையாத நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்ல சிறந்த கட்டடக் கலைஞரும், சமூகப் பணியாளரும் சிந்தனையாளருமாவார்.
- இவரின் பணியின் பொருட்டு இலங்கை அரசு இவரது உருவம் கொண்ட முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. இவர் 1964இல் இறைவனடி சேர்ந்தார். **(06 புள்ளிகள்)**

**iv. புனித தோமஸ் அக்குவினாசின் படிப்பினைகளை விளக்குக.**

- அரிஸ்டோட்டலின் மெய்யியலில் அதிக நாட்டம் கொண்டவராக விளங்கிய புனித தோமஸ் அக்குவினாஸ் (1224 - 1274) டொமினிக்கன் துறவற சபையில் இணைந்து பணியாற்றியுள்ளார்.
- இன்று திருச்சபையின் மறைவல்லுனராகவும், கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கும், அறிவியலாளர்களுக்கும் பாதுகாவலராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.
- புனித தோமஸ் அக்குவைனாஸ் தனது ஆக்கங்கள் மூலம் தனது படிப்பினைகளை முன்வைத்துள்ளார்.
- இவரது சும்மா கொன்த்ரா ஜென்திலேஸ் ("Summa Contra Gentiles") என்னும் ஆக்கத்தின் வழியாக அரேபிய மெய்யியலாளர்களுக்கு எதிராக கிறிஸ்தவ விசுவாச உண்மைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.
- கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு இறைவனைப் பற்றிய விளக்கங்களை முன்வைத்துள்ளார்.
- மனித அறிவுச் சிந்தனையின் உதவியுடன் படைப்பைப் பற்றியும், முடிவில்லா வாழ்வைப் பற்றியும் விளக்கியுள்ளார்.
- சும்மா தியலோஜி ("Summa Theologiae") என்னும் நூலில் விசுவாசம், அறநெறி பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை முன்வைத்துளளார்.
- இந்நூலில் மூன்று பாகங்களாக தனது விளக்கங்களை முன்வைத்தார்.
- கடவுளின் தன்மை அனைத்தும் இறைவனிடமிருந்தே தோற்றம் பெறுகின்றன.
- சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்கள் கடவுளிடமே இறுதியில் சங்கமம் ஆகின்றனர்.
- சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவே வழியாகவுள்ளார் என்னும் விசுவாச படிப்பினைகளை விளக்கியுள்ளார்.
- மனித அறிவுத்திறனால், மெய்யியல், இறையியல் உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பாதுகாத்து, விளக்கும் படிமுறையை முன்வைத்தார். இது ஸ்கொலாஸ்டிசம் (Scholaticism) எனப்படும்.
- இம் முறையினூடாக இறையியல் இறைவெளிப்பாட்டையும், திருச்சபையில் கற்பிக்கும் பாரம்பரியத்தையும் வரையறுத்தார்.

**(08 புள்ளிகள்)**

# கிறிஸ்தவ நாகரிகம்
## பகுதி – II

**04. இயேசுகிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருள் கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வின் ஆதாரமும் அச்சாணியும் ஆகும் எனும் உயர்ந்த செய்தியினை மாணவர்களின் மனப்பாங்கினைக் கொண்டு மதிப்பீடு செய்தல்.**

**i. இயேசுவின் பாடுகள், மரணம் பற்றிய, நற்செய்தியாளரான யோவானின் படிப்பினைகளை முன்வைக்குக.**

- இயேசுவின் பாடுகள், மரணம் தொடர்பாக நற்செய்தியாளர் யோவான் முன்வைக்கும் இறையியல் கருத்துக்கள் மிக ஆழமானவை.
- இயேசு நிலைவாழ்வை அளிப்பதற்காக இறைத் தந்தையால் அனுப்பப்பட்டவர் என்பதை “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்” (யோவா. 10 : 10) எனக் குறிப்பிட்டுள்ளார்.
- இறுதிவரை இறைத்தந்தையால் அன்பு செய்யப்பட்டதால், தன் வாழ்வை இயேசு கையளித்தார். “தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” (யோவா 15 : 13) என்றார். இயேசு இறுதிவரை தம்மவரை அன்பு செய்து இறந்தார். “அவர் அவர்கள் மேல் இறுதிவரை அன்பு செலுத்தினார்” (யோவா 13 : 1) எனக் கூறுகின்றார்.
- இயேசுவின் வாழ்வு, பணி, போதனைகள், அருஞ்செயல்கள் யாவும் இறைத்தந்தையை வெளிப்படுத்தும் அடையாளங்களாகும். அவை இறை அன்பின் வெளிப்பாடுகள். இவ் இறை வெளிப்பாட்டின் உச்சக் கட்டமே இயேசுவின் பாடுகளும் மரணமும் எனக் குறிப்பிடுகின்றார்.
- இயேசுவின் மரணம் இறைதந்தைக்குக் கீழ்ப்படிந்து அவரது அன்பை முழுமையாக வெளிப்படுத்திய அன்பான மகனின் விருப்புச் செயலாகும்.
- இயேசுவின் மரணம் இறைத் தந்தையால் மகிமைப்படுத்தப்படுவதற்கு அவர் தந்தையிடம் திரும்பிச் செல்லும் பயணமாகும். **(10 புள்ளிகள்)**

**ii. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வை மேலும் விருத்தி செய்து கொள்வதற்குத் துணையாய் அமையும் விதத்தை விளக்குக.**

- இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பே கிறிஸ்தவ சமயத்தின், கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் நடுவப் பொருளாக அமைகின்றது.
- எனவே தான் புனித பவுல் “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரி. 15 : 14) எனக் குறிப்பிடுகின்றார்.
- இயேசு உயிர்ப்பின் வழியாக மறுமையை அடைந்து விட்டார். அவர் நித்தியத்திற்கும் வாழ்கின்றார். உயிர்ப்புக்குப் பின்னரான அவரது வாழ்வு வரலாற்று வாழ்வு அல்ல என்பதை நற்செய்தியாளர் எடுத்துக் கூறுகின்றனர்.

- உயிர்த்த இயேசு மகதலா மரியாவுக்கு காட்சி கொடுத்தல், சீடர்களுக்குக் காட்சி கொடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் கிறிஸ்துவின் உயிர்ப்பின் உண்மைத் தன்மையை நற்செய்தியாளர் எடுத்துக் காட்டுகின்றனர்.
- எனவே கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் உயிர்ப்பில் முழுமையான நம்பிக்கை கொண்டு கிறிஸ்துவுக்கு சான்று பகர்தல் வேண்டும்.
- கிறிஸ்து உயிர்த்தெழுந்தது போல் கிறிஸ்தவர்களும் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கையோடு கிறிஸ்துவின் போதனைகளையும் வாழ்வு முறைகளையும் பின்பற்றி வாழ வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

**05. தொடக்கத் திருச்சபை தீர்மானங்களை மேற்கொள்வதிலும் நற்செய்தியினை அறிவிப்பதிலும் தூய ஆவியாரில் நம்பிக்கை வைத்து செயற்பட்ட விதத்தை அறிவதுடன் இன்று கிறிஸ்தவ சான்று பகர்தலில் எவ்வாறு தூய ஆவியானவரின் வல்லமையிலும் வழிகாட்டலிலும் தங்கியிருக்க வேண்டும் என்ற மாணவரின் அறிவைப் பரீட்சித்தல்.**

i. **முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதிலும் நற்செய்தி அறிவிப்பதிலும் தொடக்க திருச்சபையானது எப்போதும் தூய ஆவியில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.**

- இயேசுக் கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையானது தூய ஆவியின் வருகையுடன் அவரது வல்லமையைப் பெற்றே செயற்படத் தொடங்கியது.
- எனவே நற்செய்தியை அறிவிக்கின்ற போதும் முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்கின்ற போதும் தூய ஆவியில் நம்பிக்கை வைத்தே தொடக்கத் திருச்சபையினர் செயற்பட்டனர்.
- தூய ஆவியின் வல்லமையைப் பெற்றே புனித பேதுரு தனது உரைகளை ஆற்றினார். (1 வது உரை, 2 வது உரை)
- தூய ஆவியின் வல்லமையாலேயே புனித பேதுரு பிறவி முடவனைக் குணமாக்கி முதற் புதுமையை நிகழ்த்தினார்.
- தூய ஆவியின் வழி நடத்தலிலேயே திருத்தொண்டர்களைத் தெரிந்தெடுத்தார்கள்.
- திருத்தொண்டர் ஸ்தேவான் தூய ஆவியின் வல்லமையால் நற்செய்தியை அறிவித்தல்.
- திருத்தொண்டர் பிலிப்பு சமாரியாவில் ஆற்றிய பணி போன்றவற்றில் தூய ஆவி செயற்பட்ட விதத்தை அறிய முடிகின்றது. **(10 புள்ளிகள்)**

ii. **இன்றைய உலகில் கிறிஸ்தவ சான்று பகர்தலானது, தூய ஆவியானவரின் வல்லமையிலும் வழிகாட்டுதலிலிலும் ஏன் தங்கியிருக்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்துக.**

- கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்கு தூய ஆவியின் வல்லமையும் வழிகாட்டுதலும் அவசியமாகும்.
- நாம் வாழும் இன்றை உலகில் கிறிஸ்தவ நம்பிக்கையை சீர் குலைக்கும் வகையில் பல தீய சக்திகள் காணப்படுகின்றன. அவற்றை முறியடித்து நம்பிக்கையில் நிலைத்திருக்க தூய ஆவியின் வல்லமையும் வழிகாட்டலும் அவசியமாகும்.
- உதாரணமாக கிறிஸ்தவ நம்பிக்கையை சீர்குலைக்கும் நோக்குடன் பல பயங்கரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் மத்தியில் எமது கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக இருக்க தூய ஆவியின் வழிநடத்தல் அவசியம்.
- கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு எதிராக பலவிதமான தப்பறைகளும் பொய்ப் பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை எதிர்கொள்ள தூய ஆவியின் வல்லமையும் வழி நடத்தலும் அவசியம்.
- தொடர்ச்சியாக மனித குலத்தைப் பாதித்து வரும் கொவிட் நோய் கிறிஸ்தவர்கள் மத்தியில் நம்பிக்கைத் தளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இவ்வேளையில் நம்பிக்கையில் உறுதியாய் இருக்க தூய ஆவியின் வழிகாட்டல் அவசியமாகின்றது.
- அறிவியல் வளர்ச்சியும் நாகரிக மோகமும் ஆடம்பரமான வாழ்க்கை முறைகளும் உண்மையான கிறிஸ்தவ வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவற்றில் இருந்து விடுபட்டு கிறிஸ்தவ நம்பிக்கையிலும் வாழ்விலும் உறுதியுடன் இருக்க தூய ஆவியின் வல்லமையும் வழி காட்டலும் அவசியம். **(10 புள்ளிகள்)**

**06. வரலாற்றில் கிறிஸ்தவர்கள் பல்வேறுபட்ட கலாபனைகளைச் சந்தித்து வந்துள்ளார்கள். முதல் நான்கு நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் தாங்கள் சந்தித்த கலாபனைகளுக்கு அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம் போன்ற விழுமியங்கள் வாயிலாக பதில்மொழி கொடுத்தார்கள் எனும் செய்தியினை மாணவர்களின் புரிதல் வாயிலாக பரீட்சித்தல்.**

**i. முதல் நான்கு நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த பல்வேறுபட்ட கலாபனைகள் குறித்து விளக்குக.**

- முதல் நான்கு நூற்றாண்டில் யூத மற்றும் உரோமய கலாபனைகள் ஏற்பட்டன.

**யூத கலாபனை**

- யூதர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மேற்கொண்ட துன்புறுத்தல்கள் யூத கலாபனைகள் எனப்பட்டன.

**காரணங்கள்**

- யூதர்கள் தாவீதின் வழியில் வரும் ஒரு இலௌகீக அரசனை எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு அப்படியல்லாமல் ஏழைத் தச்சனின் மகனாக பிறந்தார். ஆகவே இயேசுவை மீட்பராக ஏற்க அவர்களால் முடியவில்லை.
- அவ்வாறு ஏற்றுக் கொண்ட யூதக் கிறிஸ்தவர்களை அவர்கள் துன்புறுத்தத் தொடங்கினர்.
- யூத தலைவர்கள் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டனர் மேலும் அதனால் தமது பதவிகள் பறிபோய்விடுமோ என்றும் அஞ்சினர்.
- யூதர் உரோமையரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதற்கு கிறிஸ்துவை மெசியாவாக ஏற்றுக் கொண்டதே காரணமெனவும் பழி போட்டனர்.
- யூதர்கள் இயேசுவை எதற்காக வெறுத்து சிலுவையில் அறைந்தனரோ அதே காரணத்துக்காக கிறிஸ்தவர்களையும் வெறுத்துத் துன்புறுத்தினர்.

**விளைவுகள்**

- ஆரம்ப கிறிஸ்தவர்கள் கடும் துன்பத்தை அனுபவித்தாலும் பல நீடித்த நல் விளைவுகள் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டன.
- எருசலேமிலிருந்து சிதறிப்போன யூத கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து கிறிஸ்தவத்தைப் பரப்பினர்.
- குறிப்பாக சவுலின் மனமாற்றத்தின் பின்பு கிறிஸ்தவம் விரைவாக பரவ ஆரம்பித்தது.
- யூதர்களும் புறவினத்தாரும் கிறிஸ்தவராயினர். கீழைத்தேசத்திலும் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது.

**உரோமைய கலாபனைகள்**

- யூத கலாபனைகளைத் தொடர்ந்து கிறிஸ்தவர்கள் உரோமையர்களின் துன்புறுத்தல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. இவை உரோமைய கலாபனைகள் எனப்படுகின்றன.
- ஆரம்பகால வரலாற்று ஆசிரியர்கள் இக்கலாபனைகளை பத்தாக வரையறுப்பர். பத்தாவது கலாபனை மிகக் கொடூரமானதாக அமைந்தது.
- இக்காலம் மறைசாட்சிகளின் யுகம் எனப்படுகிறது.
- விவிலிய அறிஞர்கள் இக் கலாபனைகளை மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

**கொள்கைக் கலாபனைகள்**

- கிறிஸ்தவத்தின் எழுச்சியால் யூத மற்றும் புறவின மதங்களிடையே முரண்பாடுகள் தோன்றின. இது உரோமைய பேரரசின் அமைதியை குலைத்தது.
- அதனால் உரோமைய அதிகாரிகள் தமது மதக்கொள்கையை நிலைநாட்டி மத அமைதியை ஏற்படுத்த கிறிஸ்தவராக இருப்பதே குற்றம் என்ற கொள்கை நிலைப்பாட்டை எடுத்து அவர்களை அழிக்கத் தொடங்கியது கொள்கைக் கலாபனை எனப்பட்டது.

**சந்தர்ப்பவாத கலாபனைகள்**

- கலாபனைகள் பெரும்பாலும் ஆளுநர்களின் தயவிலேயே தங்கியிருந்தது. கிறிஸ்தவரோடு புரிந்துணர்வில் இருந்த ஆளுநர்களின் இடங்களில் கலாபனைகள் இடம்பெறவில்லை.
- சில இடங்களில் உரோமையர் கிளர்தெழுந்து முறையிட்டபோது கலாபனைகள் இடம்பெற்றன. இத்தகைய கலாபனைகள் சந்தர்ப்பவாதக் கலாபனைகள் எனப்பட்டன.

**அரச கலாபனைகள்**

- கிறிஸ்தவர்களின் தொகை பெருகவே அவர்கள் உரோமைய பேரரசுக்கு ஆபத்து எனக்கருதி பேரரசர் கலாபனைகளை முன்னெடுக்கத் தொடங்கியது அரச கலாபனைகள் எனப்பட்டன.

**காரணங்கள்**

- கிறிஸ்தவர்கள் உரோமைய கடவுளர்களை வணங்க மறுத்தமை
- கிறிஸ்தவர் சிலைவழிபாட்டுக்கு எதிராக இருந்ததால் சிலை செய்பவர்களும் சிலை வழிபாட்டால் பணம் உழைப்பவரும் பகைமை கொண்டமை
- கிறிஸ்தவர்கள் இரவிலும், ஒளிந்தும் ஒன்று கூடியது துர்நடத்தைக்கோ எனும் சந்தேகம்
- இயேசுவின் உடல் இரத்தத்தை புசிப்பதென்ற விடயம் ஏற்படுத்திய இவர்கள் குழந்தைகளை பலியிட்டு உண்ணுகிறார்களோ என்ற சந்தேகம்
- உலகில் நிகழும் அனைத்து அழிவுகளுக்கும் கிறிஸ்தவரே காரணமென்ற எண்ணம்
- உரோமைய பேரரசை விட இறையரசே பெரிதென கிறிஸ்தவர்கள் கருதியது
- கிறிஸ்தவர்கள் உரோமைய அரசருக்கும் கடவுளுக்கும் தூபம் காட்ட மறுத்தமை
- கிறிஸ்தவரின் தனித்துவமான போக்கும் நடைமுறையும் உரோமைய பண்பாட்டுக்கு எதிரானது என்ற எண்ணம்
- யூதக் கிறிஸ்தவர்கள் மீதான வெறுப்பினால் யூதர்கள் உரோமையரின் கோபத்தை தூண்டி விட்டமை

**ள்ளிகள் )**

ii. **'கலாபனைக்கு கிறிஸ்தவர்கள் அளித்த பதிலானது அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவத்தின் செய்தியினை இன்றை உலகிற்கு வழங்கியுள்ளது.' கருத்துரைக்குக.**

- கிறிஸ்தவர்கள் துன்புறுத்தல்களை கிறிஸ்துவுக்காக மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டனர். இது அவர்களது கிறிஸ்து மீதான அன்பை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.
- கலாபனைகளில் அவர்கள் யாரையுமே காட்டிக்கொடுக்க மறுக்கின்றனர். இது அவர்கள் திருச்சபை மீது கொண்ட அன்பை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.
- ஒருவர் துன்புறுத்தப்பட்டபோது ஏனையோர் அவருக்காக மன்றாடிக் கொண்டிருந்தனர். இது அவர்களது சகோதர அன்பை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.
- துன்புறுத்தியவர்கள் மீது எவ்வித வெறுப்பையும் கொண்டிருக்கவில்லை மாறாக இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்ற இயேசுவின் மனநிலையை வெளிப்படுத்தினர். இது அவர்களது மன்னிக்கும் பண்பை இவ்வுலகுக்கு தெரிவிக்கிறது.
- துன்புறுத்தப்பட்டோரோடு ஏனையோர் செபத்திலும் அன்பிலும் நிலைத்திருந்தனர். இது அவர்களது சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- துன்புறுத்தல்கள் மத்தியிலும் அவர்கள் தவறாது ஒன்றுகூடி அன்பு விருந்தைக் கொண்டாடினர். இதுவும் அவர்களது சகோதரத்துவத்துவத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டுகிறது.
- துன்புறுத்தப்பட்டபோதிலும் அவர்கள் தமது நம்பிக்கையில் உறுதியாய் இருந்தனர். இது அவர்களது நம்பிக்கையின் உறுதியை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.
- இன்றைய உலகு கலாபனையால் பாதிக்கப்பட்டோரின் இத்தகைய செய்திகளிலிருந்து தனது வாழ்வுக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

**07. இரவலர் சபைகளைக் குறிப்பிட்டு அவை திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை அறிந்து, 'நற்செய்தியின் ஏழ்மை' எவ்வாறு திருச்சபை உலகில் மீட்பின் அடையாளமாக விளங்கியது என்பதை விளக்கும் மாணவரின் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. இரவலர் சபைகளைப் பெயரிட்டு, அக்காலத்தில் சீர்குலைந்திருந்த திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு அச் சபைகள் ஆற்றிய பணிகளை விளக்குக.**

**இரவல் சபைகள் - அவற்றின் பணிகள்**

1. வல்தேசியன் துறவற சபை
2. பிரான்சிஸ்கன் துறவற சபை
3. டொமினிக்கன் துறவற சபை

**வல்தேசியன் துறவற சபை**

- வல்தேசிய துறவற சபையின் நிறுவுனராகிய பீட்டர் வால்டோ தன்னிடம் உள்ள யாவற்றையும் ஏழைகளுக்கு பகிர்ந்து விட்டு ஏழ்மை வாழ்வு வாழ்ந்தார். (மத். 17 : 21)
- இறைவார்த்தையின் ஒளியில் தனது ஆன்மீக வாழ்வை வளப்படுத்திக் கொண்டார்.
- இவரைப் பின்பற்றி பலரும் அவருடன் இணைந்ததால் லயன்சின் ஏழைகள் எனும் பெயருடன் மக்கள் மத்தியில் சிறப்புப் பெற்றார்கள்.
- நற்செய்தியைப் பறைசாற்ற ஏழ்மை உடையணிந்து, காலில் மரத்தினால் செதுக்கப்பட்ட பாதணிகளை அணிந்து, இருவர் இருவராகச் சென்று பணியாற்றினார்கள்.
- பீட்டர் வால்டோவின் ஏழ்மை, உலகப்பற்றற்ற தூய்மையான வாழ்க்கை அவர் மேற்கொண்ட நற்செய்திப் பணி என்பன மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றன.
- திருச்சபையின் தலைவர்கள், ஆயர்கள், குருக்களின் லௌகீக வாழ்க்கை முறை போன்றவற்றை விமர்சனம் செய்தார்.

**பிரான்சிஸ் துறவற சபை**

- இத்தாலியின் அசிசியைச் சார்ந்த பிரான்சிஸ் அசிசியால் ஆரம்பிக்கப்பட்டது.
- சிறப்புப் பண்புகளாக, தனிமையான இடங்களுக்குச் சென்று செபித்தல், நற்செய்திப் படிப்பினைகளின் படி வாழ்க்கை நடாத்த முயற்சித்தல், தனது குற்றங்களுக்காக மனம் வருந்துதல், தனது வினோத வாழ்வு, பெற்றோர், நண்பர்களிடமிருந்து பிரிதல், ஏழைகளுக்கு உதவ முற்படுதல், ஒரு ஏழையாக வாழ முற்படுதல்.
- உலகெங்கும் பரந்து சென்று தமது வாழ்வாலும், வார்த்தையாலும் நற்செய்தியினைப் போதித்து, திருச்சபைத் தலைவர்களின் வாழ்வினில் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
- தலைவர்களின் லௌகீக போக்கையும், தவறுகளையும், பாவங்களையும் உணர்த்தி அவர்களை மனந்திருந்த அழைத்துப் பாவமன்னிப்பின் அவசியத்தை வலியுறுத்தினர்.
- மறைபோதகர் பணி, விவிலியப் படிப்பு, கல்வி கலாசாரத் துறைகளில் சிறப்புப்பணி ஆற்றினார்கள்.

- பெண்களுக்காக ஏழைகள் கிளொரா சபை, துறவற வாழ்வினை மேற்கொள்ள முடியாதிருந் தவர்களுக்காக (பொதுநிலையினர்) தவத்தின் சகோதரிகள் என்கிற மூன்றாம் சபையினை அமைத்து திருச்சபையின் இருள் நிறைந்த காலத்தில் அதன் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தார்கள்.

**டொமினிக்கன் துறவற சபை**

- டொமினிக் டி கூஸ்மான் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.
- தப்பறைப் போதனைகளுக்கு மத்தியில் இச்சபையினை வளர்த்தெடுத்து தப்பறைகளுக்கு எதிராக போதனைகளை மேற்கொண்டார்கள்.
- தப்பறையினை போதிப்பவர்களுக்கு உண்மையைப் போதிப்பதே இவர்களின் முக்கிய பணியாகும்.
- இவர்கள் ஏழ்மையை மையப்படுத்தி மறையுரைகள் ஆற்றி மக்களை உண்மை விசுவாசத்தில் தக்க வைத்தனர்.
- ஆழ்தியானம், ஆன்மீகம், அப்போஸ்தலிக்கப் பணி, கல்வி, செபம், குழுவாழ்வு, குடியாட்சி, முடியாட்சி முறைகளையும் உள்வாங்கி ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொண்டனர்.
- பெண்களுக்கென 2 ஆம் சபை, ஆண் – பெண் பொதுநிலையினருக்கென 'கிறிஸ்துவின் படையமைப்பு' என்கிற மூன்றாம் சபையினையும் உருவாக்கி தம் பணிகளை விரிவாக்கினர்.
- இச்சபையினர் தங்களது உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கு அடுத்தவர்களில் தங்கி வாழ்ந்து அவர்களது உதவியினை நாடினார்கள்.
- துறவற வாழ்வில் சுதந்திரமாக செயற்பட வேண்டும் எனும் நோக்குடன் **ஏழ்மை** என்னும் துறவற வார்த்தைப்பாடு அர்ப்பணத்தை மேற்கொண்டனர்.
- நற்செய்திப் பணி, மறையுரைகள், ஒப்புரவுப் பணி, நோயாளர்களை பராமரித்தல், கைவிடப் பட்டவர்களுக்கு உதவுதல், பிறநாடுகளுக்கு சென்று பணியாற்றுதல். **(10 புள்ளிகள்)**

ii. **'நற்செய்தியின் ஏழ்மை' எல்லாச் சந்தர்ப்பங்களிலும் திருச்சபை உலகில் மீட்பின் அடையாளமாக இருப்பதற்குத் துணையாய் அமையும் விதத்தினை விளக்குக.**

- நற்செய்தி ஏழ்மை என்பது திருச்சபை உலகப் பற்றில் இருந்து விலகி வாழ்வதாகும்.
- தன்னுடைய எளிமையான வாழ்வால் ஏழை எளியவர்களோடு ஒன்றித்த இயேசுக் கிறிஸ்துவைப் போல் திருச்சபையும் ஏழை எளியவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்த உழைக்க வேண்டும்.
- இன்று பெருகி வரும் உலகப் போக்கிற்கு எதிரடையாளமாக திருச்சபையைக் காட்டும்.
- உலக இன்பங்கள் எம்மை அடிமைப்படுத்துகின்றன. ஆனால் எளிமையே மனிதரை விடுதலையாக்கி உண்மையான மீட்பைத் தரும்.
- இது உண்மையாகவே இயேசு வாழ்ந்த வாழ்க்கை என்பதால் உலகிற்கு இயேசுவை வெளிப்படுத்த இத்தகைய வாழ்வு உதவும்.

**(10 புள்ளிகள்)**

**08. மனித மாண்பு தொடர்பான இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளை அறிந்து இன்றைய உலகில் மனித மாண்பு மீறப்படும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு அதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி சிந்திக்கும் அறிவைப் பரீட்சித்தல்.**

**i. மனித மாண்பு தொடர்பான இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளை விளக்குக.**

**மனித மாண்பு குறித்த 2 ஆம் வத்திக்கான் சங்கப் படிப்பினை**

- எல்லா மனிதரும் கடவுளின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்டவர்கள்.
- இதனால் கடவுள் வழங்குகின்ற சுதந்திரம் பிறப்புரிமையாகும்.
- மனிதர்கள் அறிவும், அறநெறி உணர்வும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.
- அனைத்திலும் ஆழ்பொருள் தேடும் ஆர்வம் மனிதர்களிடத்தில் இயல்பாய் உள்ளது.
- மனிதர்கள் அவர்களது மனச்சான்றின் ஒளியில் நல்லதையே எப்போதும் நாடி, தீயதைத் தவிர்த்து நடக்கும் ஆற்றல் கொண்டவர்கள்.
- மாண்புடன் உருவாக்கப்பட்ட மனிதர்கள் தனி மரமாக வளர்ந்து தழைத்துவிட முடியாது. மனிதர்கள் தனித்தீவல்ல.
- சமூகமாக வாழ்வது மனிதர்களின் சிறப்புப் பண்பாகும். அவர்களது சமூகப் பண்பிலிருந்து அவர்கள் சமத்துவமாக வாழும் தன்மை பிறக்கின்றது.
- மனிதனது மாண்பிலிருந்து அவனது அடிப்படை உரிமைகள் பிறப்பதால் அவை மதித்துப் பேணப்பட வேண்டும்.
- பால், இனம், நிறம், சமூக நிலை, மொழி, சமயம் ஆகியவை சார்ந்து எல்லா விதமான வேறுபாடுகளும் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும். **(10 புள்ளிகள்)**

**ii. மனித மாண்பு மறுதலிக்கப்பட்ட இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, மனித மாண்பினைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் பற்றி விளக்குக.**

**சிறுவர் துஸ்பிரயோகம்**

- சிறுவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- சட்ட, நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும்.

- சக பணியாளர்களுக்கு ஆண் – பெண் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- பணியிடங்களில் துன்புறுத்தல்களை முறையிடும் கட்டமைப்புக்களை உருவாக்குதல்.
- எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய ஒழுக்கக் கோவைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.


Past Papers Wiki - Download More Past Papers and Study Well!

**மனித உயிரை அழித்தல்**

- சக மனிதர்களின் உயிரைப் பாதுகாத்தல்.
- உயிரின் மாண்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- கொலைகளுக்கான தண்டனைகளை வழங்கல்.
- கருவழிப்பு ஒரு பாவம் என்பதை உணர்த்தல்.
- உயிர் இறைவனுக்குச் சொந்தமானது. அதை அழிக்க எவருக்கும் உரிமை இல்லை என்பதை தெளிவுப்படுத்தல்.

இவை போன்ற வேறுபல உதாரணங்கள் விளக்கப்பட்டிருப்பின் கவனத்தில் கொள்ளவும்.

**(10 புள்ளிகள்)**

WWW.PastPapers.WIKI



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!